IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**MCOP.No. 249/2019**

**நாள்– 11.12.2024**

**ம.சா.1 திரு. முகமது ரபீக் –** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

1**ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பிளஸ் டு படித்துள்ளேன். கறிக்கடை வைத்துள்ளேன். விபத்து சம்பந்தமான விவரங்களை வழக்கறிஞருக்கு நான் தான் சொன்னேன். எனது அப்பாவின் இருசக்கர வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தை 1ம் எதிர்மனுதாரராக கட்சி செய்துள்ளோம். காப்பீடு நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை விவரங்கள் பற்றி எனக்கு முழுமையாக தெரியாது. அந்த எதிருரை சங்கதிகளை மறுதலிக்கும் விதமாக நான் நீதிமன்றத்தில் சாட்சியம் இடவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்தது 22.06.2006 ஆனால் கோரிக்கை மனு 2018ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

விபத்து சம்பந்தமாக புகாரை யார் கொடுத்தார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. எதிரே வந்த இனந்தெரியாத வாகனம் மோதி தான் விபத்து ஏற்பட்டது. அந்த வாகனத்தின் ஓட்டுநர் மீது தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. இனந்தெரியாத வாகனம் மோதி விபத்துஏற்பட்டால் மோட்டார் வாகன சட்டப்பிரிவு 162 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்படவேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்து வாகனத்தை பொறுத்த வரை 1ம் எதிர் மனுதாரரின் காப்பீட்டு சான்றிதழின் அடிப்படையில், நாங்கள் இறந்துபோனவரின் வாரிசுகள் என்ற அடிப்படையில் 3ம் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். இம்மனு மோட்டார் வாகன சட்டப்பிரிவு 166 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் நாங்கள் 3ம் தரப்பினர் இல்லை என்ற நிலையில் 1ம்எதிர்மனுதாரர் நிறுவனம் எங்களுக்கு எந்த இழப்பீடும் தரவேண்டியதில்லை என்றால் சரியல்ல.

எனது தாயார் ஐ.ஓ.பி வங்கி, திருநெல்வேலி கிளையில் ரூபாய்.1,00,000/- நஷ்டஈட்டை காசோலையாக 1ம் எதிர்மனுதாரரிடம் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த விவரம் எனக்கு தெரியும் என்றும், தற்போது வழக்கிற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகமானது என்றும், 1ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. மோட்டார் வாகன சட்டப்பிரிவு 166 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR
Location: Additional District and Sessions Judge, Tenkasi.